DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, DENKANIKOTTAI
PROSECUTION WITNESS

SC. No. 71/2023 Crime No. 523/2020 Station Thally PS

| | | | |
|---|---|---|---|
| Name | Lw22/Pw8/R.Saravanan/காவல் துணை கண்காணிப்பாளர் பணியிடை பயிற்சி மையம் கோயம்புத்தூர். | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | |

**24.10.2025.**

**1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர் .**

**அ.சா.8.முதல் விசாரணை தொடர்ச்சி**

எதிரி முருகேஷ் என்பவரிடம் இருந்து கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றப்பட்ட 145 செ.மீ. கருப்பு நிறத்தினால் ஆன மரக்கட்டையால் ஆன கைப்பிடி உடன் கூடிய நாட்டு துப்பாக்கி ஒன்று அந்த துப்பாக்கி **அ.சா.பொ.ஆ.13** ஆகும். சுமார் 155 செ.மீ நீளம் உள்ள பழுப்பு நிறத்தினால் ஆன மரக்கைப்பிடியுடன் கூடிய நாட்டு துப்பாக்கி ஒன்று ருத்திரப்பா என்பவர் காட்டு விலங்குகளை வேட்டையாடுவதற்காக வைத்திருந்ததாக கூறி எதிரி முருகேஷ் ஆஜர் செய்தார். அந்த துப்பாக்கி **அ.சா.பொ.ஆ.14** ஆகும். பிறகு நான் பணி மாறுதல் சென்றதால் வழக்கு கோப்பினை காவல்நிலைய பொறுப்பில் ஒப்படைத்து சென்றேன்.

**குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்**

முருகேசன் துப்பாக்கியை எடுத்து கொடுத்தாக சொல்லும் தேதி என்ன வென்றால் 30.08.2020 ஆகும். எதிரிகளுக்கு எழுதப்படிக்க தெரியாது என்றும், நான் காவல் நியைலத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகஜர், படிவம் 91 ஆகியவற்றை நானே தயார் செய்து தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. அகலகோட்டை கிராம நிர்வாக அதிகாரியை நான் தான் விசாரணை செய்தேன் என்றால் சரி. அ.த.சா.ஆ.16 ல் SBML என்ற வார்த்தையை நானாக சேர்த்துக்கொண்டு காவல் நியைலத்தில் இருக்கும் துப்பாக்கியை கைப்பற்றியதாக காட்டியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சரிவர புலன் விசாரணை செய்யவில்லை என்றும், புள்ளிவிவர கணக்கிற்காக எதிரிகள் மீது போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

ஓம்./— எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.